நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 346/2025

## P.W.3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கமலக்கண்ணன் |
| தந்தை / கணவர் பெயர் | : | கிருஷ்ணசாமி |
| கிராமம் | : | குட்டப்பட்டி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW3 |
| வயது | : | 68 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 24–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 02.55 PM.

1. நான் தற்போது குட்டப்பட்டியில் குடியிருக்கிறேன்.நான் விவசாயம் செய்து வருகிறேன். இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. யாருக்கு அடிப்பட்டது என்று தெரியாது. விபத்திற்கு யார் காரணம் என்றும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

2. **சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. சிவக்குமார் என்பவரை தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 01.02.2025 மாலை 06.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எனக்கு தெரிந்த சிவக்குமார் TN 30 S 3822 இருச்சக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு அவருக்கு பின்னால் கவிதா அவருடைய மனைவி உட்கார வைத்துக்கொண்டு பால் சொசைட்டிக்கு சென்று பால் ஊற்றி விட்டு குட்டடப்பட்டி பிரிவு ரோடு அருகே வண்டியை வலதுப்பக்கமாக வடக்கு நோக்கி திரும்பினார் என்றால் நான் பார்க்கவில்லை.
2. அவர்களுக்கு எதிரே மாதநாயக்கன்பட்டியை நோக்கி TN 29 R 9711 என்ற இருசக்கர வாகனத்தை எதிரி வேகமாக ஓட்டிவந்து சிவக்குமார் ஓட்டிவந்த இருச்க்கர வாகனத்தின் மீதுமோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றும் அதில் சிவக்குமார் மற்றும்கவிதாவுக்கு பலத்த அடிப்பட்டது என்றும் அதை நான் நேரில் பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.
3. தற்போது எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 03.05PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**